**In the Court of Judicial Magistrate No.I, Kovilpatti.**

DEPOSITION OF WITNESS

(Chapter XXIII, Cr.P.C)

| | | |
|---|---|---|
| Case No. | : | CC No.261/2022 |
| Deposition of witness for Prosecution | : | P.W–5 |
| Name | : | வெள்ளைத்துரை, வயது 56 |
| Father Name/Husband Name | : | முத்துப்பாண்டி |
| Village | : | கோவில்பட்டி |
| Taluk | : | கோவில்பட்டி |
| Calling | : | கொத்தனார் |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the 07th day of February 2025.

**(எதிரி ஆஜர் இல்லை கு.வி.மு.ச பிரிவு 317 ன் கீழ் மனுதாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

**<u>முதல் விசாரணை</u>**

1. நான் தற்போது கோவில்பட்டியில் வசித்து கொத்தனார் வேலை செய்து வருகிறேன். என்னிடம் காட்டப்படும் ஆவணங்களில் (ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில்) உள்ள இரண்டாவது கையொப்பங்கள் என்னுடையது தான்.
2. அவற்றை நான் மந்தித்தோப்பில் வேலை செய்துவிட்டு வந்து கொண்டிருந்த போது பால் பண்ணை அருகே இரண்டு கையொப்பங்களும் செய்து கொடுத்தேன். போலிசார் கேட்டுக் கொண்டதற்கு இனங்க செய்து கொடுத்தேன்.
3. அதில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது. **(ஒப்புதல் வாக்குமூலம் மற்றும் அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பங்கள் முறையே அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆக குறியீடு செய்யப்படுகிறது.)** வழக்கு பற்றி போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(அரசு தரப்பில் சாட்சியை பிறழ் சாட்சியாக அறிவித்து குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது. அவ்வாறு சாட்சி பிறழ் சாட்சி என அறிவிக்கப்பட்டு அரசு தரப்பில் குறுக்குவிசாரணை செய்ய அனுமதி வழங்கப்பட்டது.)**

1. கடந்த 05.04.2020 ஆம் தேதி பகல் 10.30 மணியளவில் மந்தித்தோப்பு விநாயகர் கோவில் அருகே எதிரியை போலிசார் கைது செய்து விசாரணை செய்த போது அவர் தானாக முன் வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தினை உங்கள் முன்னிலையில் பதிவு செய்ததாகவும் அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அடிப்படையில் அன்றைய தினம் 11.45 மணிக்கு மங்கள விநாயகர் கோவில் முன்பு வைத்து எதிரி ஆஜர் செய்த இருச்சக்கர வாகனத்தை அத்தாட்சியில் கைப்பற்றியதாகவும் அந்த அத்தாட்சியில் இரண்டாவதாக கையொப்பம் செய்ததாக போலிசார் விசாரணையில சொல்லிவிட்டு தற்போது உண்மையை மறைத்து பொய் சாட்சி அளிக்கிறீர்கள் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்குவிசாரணை – இல்லை**

**மறுவிசாரணை இல்லை.**

Taken before me in open court in the presence of accused and read over to the witness and acknowledged by him/her to be Correct.

Sd/ Tr. M. Kadarkarai Selvam
Judicial Magistrate No.I,
Kovilpatti.